தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 18, திருவள்ளுவர் ஆண்டு – 2046

2015 செப்டம்பர் 4, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்."

தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தகுந்த காலம், செய்ய வேண்டிய முறை, தகுந்த இடம் ஆகிய ஐந்தினையும் குறித்து நன்கு தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

சார்-கருவூலத்திற்குக் கட்டடம்

***51176—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள சார்-கருவூல அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள சார்-கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அகஸ்தீஸ்வரம் வட்டம், கொட்டாரம் கிராமத்தில், புல எண் 344/6-ல் 9.97 சென்ட் அரசு புறம்போக்கு நிலம் மாவட்ட நிருவாகத்தால் நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து மாதிரி திட்ட வரைபடம் மற்றும் தோராய திட்ட மதிப்பீடு பெற்று, கன்னியாகுமரி சார்-கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திங்கள்நகரில் உள்ள சார்-கருவூல அலுவலகம் மிகப் பழமைவாய்ந்தது. அங்கு ரெக்கார்டுகளையும், தஸ்தாவேஜுகளையும் சரியாகப் பராமரிப்பதற்கு இடவசதி இல்லை. மிகச் சிறிய இடத்தில் பழமைவாய்ந்த கட்டடத்தில் இருக்கிறது. அந்தப் பகுதியில் போதுமான இடம் காலியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தச் சார்-கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 4]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் கூறியுள்ள இரணியல் சார்-கருவூலம் திங்கள்நகர் பேரூராட்சிக் கட்டடத்தில் குறைந்த வாடகையில் இயங்கி வருகின்றது. அங்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இயங்கிக்கொண்டிருக்கின்ற கட்டடத்தின் உறுதித்தன்மையை ஆய்ந்து பார்த்து, புதிய கட்டடம் தேவைப்படும் எனில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள சார்-கருவூல அலுவலகம் 1903 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகக் கூறுகிறார்கள். இந்தக் கட்டடத்தில் வட்டாட்சியர் அலுவலகம், சார்-கருவூலம், காவல் நிலையம், நீதிமன்றம் ஆகிய அலுவலகங்கள் எல்லாம் இருந்தன. தற்சமயம் காவல் நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றங்கள் எல்லாம் புதிய கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டன. பழமைவாய்ந்த அந்தக் கட்டடத்தில் மழைக்காலங்களில் மழைநீர் கசிவதால், ஆவணங்களைக்கூட பாதுகாக்கமுடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நவீன வசதிகளுடன்கூடிய புதிய சார்-கருவூல அலுவலகம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற திருத்துறைப்பூண்டி சார்-கருவூல அலுவலகம் ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில், தாலுகா அலுவலகத்துடன் சேர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தின் நிலையைப் பற்றி இங்கே விரிவாகச் சொன்னார்கள். அதன் உறுதித் தன்மையை ஆய்வு செய்து, தேவையிருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா*

அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

227—

புதைவடம்

***47691—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதி, மேகமலை ஊராட்சிக்குட்பட்ட மலைக் கிராமங்களுக்கு புதைவடம்மூலம் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆண்டிப்பட்டி தொகுதி, மேகமலை ஊராட்சிக்குட்பட்ட மலைக் கிராமங்களுக்கு புதைவடம்மூலம் மின்சாரம் வழங்க ஆய்வு செய்ததில், அந்தப் பகுதியானது பாதுகாக்கப்பட்ட மற்றும் அடர்ந்த வனப் பகுதி என்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு புதைவடம்மூலம் மின்சாரம் கொண்டுசெல்ல இயலாது என அறியப்பட்டது. இருந்தபோதிலும், அங்குள்ள சுமார் 1,036 வீடுகளுக்கு சூரிய ஒளி மின் சக்திமூலம் மின்சாரம் வழங்குவதற்கு, ரூபாய் 1.55 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிருவாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்ட பின்னர், பணிகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*